தேவிபாரதம்.

யூகிமுனி கரிசலை-36.

இது

பாலயோகியும்

ஆயுள்வேத பண்டிதருமாகிய

V. R. சுந்தரம் அவர்களால்

பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு

பரிசோதிக்கப்பட்டு

மங்கலம்—ஷண்முக முதலியாரால்

சென்னை

கோமளேசுவரன் பேட்டை

சச்சிதானந்த அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

காப்பிரைட்] 1915 [விலை [illegible]

யூகிமுனி கரிசலை - 36.

அட்டவணை.

துதி	1
பாயிரம்	1
சற்சீடரியல்பு	2
அசற்சீடரியல்பு	3
நூலிற்கூறிய பொருள்	3
மந்திரம்	3
இரசங்கட்டும் வகை	4
வீரரசபதங்கமும் - அதனாற்றீரும் வியாதியும்	6
அயக்காந்தச் சிந்தூரம்	6
இரசபஸ்பம்	7
பேதி அயக்காந்தம்	8
சுரத்திற்கு மலங்கழிய மாத்திரை	9
இலிங்கரச அயக்காந்த சிந்தூரம்	10
அயச்சிந்தூரம்	10
காந்தச்சிந்தூரம்	10
அயக்காந்த மிரண்டுஞ் சேர்த்தல்	11
இலிங்கரச மெடுத்தல்	11
இதற்கு அநுபானமும் அதனாற்றீரும் வியாதிகளும்	13
நாகபஸ்பம்	15
இதனாற்றீரும் வியாதிகள்	16
தம்பிரரசச் சிந்தூரம்	16
வாளபேதி மாத்திரை	17

சிங்கமுகத் திராவகம்	19
வீரரசமும் - வீரரசபஸ்பமும் சிந்தூரமும்	20
வீரத்திராவகம்	22
ரசச்சிந்தூரம்	24
வேறு ரசத்திராவகம்	26
அப்பிரகச் சிந்தூரம்	29
காசிபர்காதை	29
தாம்பிரபஸ்பம்	32
அண்டோடுசுண்ணம் - படிகாரச்சுண்ணம் வெள்ளீய ரசங்களைச் செய்து வேதையாட	33
வியாதிகட்கு இலிங்கரச பஸ்பத்திற் கநுபானம்	35
சண்டரசபஸ்பம்	40
தங்கரசச்சிந்தூரம்	41
சௌக்காரம்	44
அயச்செம்பு	48
கெந்தகச்சுத்தி மாத்திரை	50
தாளகச் சிந்தூரம்	52
அயச்செம்பு தங்கநாகஞ் சேர்த்துச் சிந்தூரம் அயபஸ்பம்	53

உ

தேவிபாதம்.

யூகிமுனி கரிசலை

முப்பத்தாறு.

துதி.

உமையவள் பதமல ரடியிணை சிரமேற்
றமியனு மநுதின நினைவினி னினைவாம். 1

காமனை யெரிசெய்த வாமனை நினைவில்
சோமன் பதமல ரிணைநீ துதியே. 2

மூவைந் தொகைவகை முனியரு ளியசொல்
பாவைச் சுருதியிற் பதியரு ளியதே. 3

வாதமு மநுதினம் வகையது பாராய்
நீதிசேர் ஞானமு நிலைபடு முன்னே. 4

பாயிரம் – அகவல்.

உடலுறு கருவியி லுதித்த வியாதிகள்
திடமதா யகல விளங்கொளி யவிழ்தம்

யாவையும் விளக்க வவிழ்த பாகமும்
கோவையாய் மொழிகள் குணமுள முனிவர்
பகர்ந்தது ஜைமினி பகரவே சுருக்கி
முழுவது முனிவ ரருளிய மூவறு மொழியே
குணகடல் குமரி குடகம் வேங்கட
மெனுநான் கெல்லையி னிருந்தமிழ் யாவரு
முணர்ந்தோர்
தொகைவகை விரியி லருள்கெனத் துன்று
றிகலற முந்நூல்
பெருகவே சுருக்கிப் பலமுள நூலாய்
தன்மத வாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்
கருங்கடல் வெண்குடைக் கார்நிகர் பொதிகைத்
திருந்திய செங்கோற் சீயகங்க
னருங்கலை விநோத மார்பன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே வைத்தியத் தின்நூற் சூத்திரம்
பெயரென வகுத்தனன்
பொன்மணி பொதிகை மஹாமுநி யருளிய
கரிசலின் முந்நூற்
சுருக்கியே குருமுநி சொன்னது சூத்திரம்
ஜெகதல மானிடர் செய்யும் வைத்தியம்
தொகை வகையாகத் துரிதம துரைத்த
மகாவித சூத்திர மறைப்பையுந் துரந்து
ஜெகமு துரைபோற் றெளிடந்திட னன்றே. 1

சம்சீடரியல்பு.

பாலுடன் கலந்த நீரதைப் பிரித்துக்
குடித்தது போல வன்னமா ணுக்கர்

ஆவு தண்ணீ ருண்டது போல
ஏவல்மா ணுக்க ரிருக்கவு நன்றே. 2

அசற்சீடரியல்பு.

கிளிபோற் பேசும் சீட ராகாத்
தூறினி லுடைந்த குடநீர் போல
சீறிய சீடன் சிந்தையு மாகா
எருமை குழப்பி நீரது குடிக்கு
மமையாச் சீட னவனுமே யாகா
சிரித்தல் சோம்பல் மானமாய்ச் சொல்லல்
காமி கள்வன் பிணிய னேழை
பிணக்கன் சினத்தன் றுயில்வோன் மந்தன்
தறுகணன் சாத்திரந் தடுமா றுளத்தன்
கேட்டான் பாவி புறட்ட னின்னோர்க்குக்
காட்டார் சாத்திரங் கொடுக்கார் நூலே. 3

இந்நூலிற் கூறிய பொருள்.

களங்கம் பஸ்பம் சிந்தூர லேகிய
முளங்கொளு மெழுகு முறுகியாந் தைலம்
சுன்னங் கிருதம் பதங்கந் திராவக
நன்னய மாக நவின்றனர் முநியே. 4

மாரசம் ஜயரச மயமான சாரசம்
யோரசம் சண்ட ரசமது சொல்லல்
பாத ரசமும் பகர்வீர ரசமுஞ்
சாதனை யயரசஞ் சரக்கிலே சேர்க்கலே. 5

மந்திரம்.

பீஜ மிலக்குமி பீஜ நமாவென
வியாதிநா சாஞ்சனி பிணிகள் நாசனீ

யோகினி வேதாஞ்சனி உருத்திர நாசனீ
சத்துரு நாசனி சங்கிலி ஓமென
வித்தையி லாஞ்சனி விடுத்திடப் போகுஞ்
சிந்தையி னினைத்த தெல்லாந் தந்தருள்
விந்தையாம் லோக மாதா வென்ன
முந்த வுரைத்திட மருந்துகள் சித்தி
அஷ்ட தந்திர அஷ்ட வித் தைகளுஞ்
சிஷ்டர் புரிந்தால் ஜெயசித்தி யாகுமே. 6

இரசங் கட்டும் வகை.

அரன் பீசங்கட்ட வறைகுவன் கேளு
திரமான விரதம் ஜெகஜால வித்தை
யாகுமே கட்டி லருளாய வானந்தம்
சோகுமே மணியே துப்பற வாகச்
செய்தாற் பலனும் ஜெயமாக வித்தை
பையவே கேளு பலிப்பதா மந்திரம்
மருந்துகள் சித்தி மஹாவித மாகும்
அருந்தவே ஜெபித்தா லடைவாய்ச் சித்தி
ஆமே சொல்லேவ னடைவுடன் கேளு
மதிபல முருக்கி வகையாய்க் குகையில்
அதியவே யிலுப்பைநெய் யடைவாக விட்டு
யெரிகையி லிரத மின்பமா மதியின்
தரிசின மாகச் சிக்கவே யிட்டுப்
பத்தி யெரியப் பதமாக விட்டுச்
சித்தியாய் ரசமதி சேர்ந்துமே யுருகும்
பெருங்குகை யாகப் பிலக்கவே யிட்டு
வருங்குகை தன்னில் வளமாய் நெய்யை
யிலுப்பை நெய்யை யிதமாய் விட்டுப்
பருகவே திரிசைப் பதமாய்க் கரியில்

ஊதிடநீறு முறுதியா வெண்ணெயில்
நீதியாய்க் களஞ்சு நேருள குகையில்
போட்டுமே கடையில் போக்கோ டெடுத்து
நீட்டுமே;வுண்டையாய்.நேரா யிடவும்
மிச்சம் பழத்துளே மிதமாய்ச் செலுத்தி
நச்சர வாக நாடியே நூறு
புடமிட யிறுகும் போக்கொடு கேளு
நடமிடப் புடமிடு நாட்டியே விசைவிசை
யொவ்வொரு பழத்தி லூதுமே யொருதரம்
கவ்வவே புடமிடு காட்டநா லெருவில்
கரியி லுருக்குக் கனமுள மணியாய்ப்
பரியவே யிருபத் தொருமணி செய்து
தமரது விட்டுத் தாழ்வடங் கோத்து
அமரவே ஜபங்க ளாதியாய்ச் செய்து
அக்ஷரஞ் செபிக்க ஆதியாய்ச் சித்தி
நிச்சய மாக நீடூழி.கால
மிருந்திடச் சித்தி யியல்பாய்க் கேளு
பொருந்து வினைகள் போக்கோ டேகும்
எல்லாஞ் சித்தியா மியல்புட னன்று
சொல்லால் முனிவர் சொன்னது சூத்திர
மெல்லையில் வாழு மின்பமா மனிதர்
செய்துமே வைத்தியந் திரமுடன் வாழ்வீர்
பையவே மாமுனி பகர்ந்த கரிசலின்
மூந்நூற் றறுபத்து நான்குசூத் திரத்தைச்
சின்னூ லாகத் தெளிந்திடப் பாடி
வாத வைத்தியம் வகையுடன் பாரே
நாதனார் சொன்ன நன்மா முனியே. 7

வீரரசபதங்கமும் - அதனாற்றீரும் வியாதியும்.

வண்ணம்.

வீரரச மேயொரு சேரெடு நீதழ
லுப்பொடு செங்க விட்டெரி கடமதில்
பருவந் தனிலெடு பணவெடை மதுவிடு
திரிவ மனுளத் திரிதனில் வெகுநோய்
அறிகுண நயமிது வபயம் நோயறு
மதிவெகு புண்புரை வயிற்றுவலி கூறும்
படுவரை யாப்பு பரிகெடும் வெகுரண
மதிசய க்ஷயமீளை யாதியா நோயறும்
பதிவலி மேகம் படுமுறை திரிநாள்
கடல்புகு நோய்கள் கதிபெறு ரசமதில்
ஈறது கட்டில் கருவே
லறுகு முளகுட னதில்வெகு கியாழமாய்
வைத்திடு கொப்புளி வீறது அடிபடும்
செயசய புளிபுகை யிலையது வகல
நயமுள பாத ரசமது பற்பங்
குறுமுனி யருளிய மொழியது பாரே. 8

அயக்காந்தச் சிந்துரம்.

காந்தமும், அரப்பொடி நேரிடு அலைவறு
சிந்தையி னினிபுகை நீர்தனி லரைவறு
முந்தவே நிறமது பவளம தாமினி
சிந்தையி லெடுமினி செய்வன நீறதி
விடையிடு வாலை நீரதி லரை
திரிநே ரடையிடு
இடுகட மதிலெடு யிடுமுத் தீயெரி
யிடுவது வடிதனில் விடுமதை யரைபுகைநீ
ரரைகட மரையடை யெரியிடு திரிநேர்

அடிதனி லுருகிடு மதையெடு பணவெடை
திரிகடு வாளம் நேர் கரிக்கிடு
வெருகடி தனிவிடு மதுவிடு குழையுண்
நாலே ழிருபொழு துண்டிரு
புளி புகையிலை தள்ளிடில் பிளவைகள்
ரண மினிதுள மிளிர் கூர்மம்
படுவரை யாப்புக ளடுபிணிக் குட்டம்
கபமுட னீளைக ளெலிகடி யதுவற
வலிவுட னிசிவுகள் வாதம் பொடிபட
நொடிபடு பித்தம் மெடுபடு நோய்கள்
தவிடது பொடிபோ
லடிபடும் பிணிக ளிடிவிழப் பொடிபடும்
முனிசொல வருளிய பெருவழி நூலி
லதையறி யூசிக் காந்தயம் பவளமே. 9

இரசபஸ்பம்.

ஈரறு ரசமிதெட்டு யினிதான பண்ணை
யிதிலானபாதி இடவே ரசத்தை யடைவாய்
காரறு புகைநீர் தன்னைக் கடிதாகவூற்றி
கனிவாக வேகக் கலமான கல்வமதிலே
வாரறு ரவியில் வளமாக வைக்க
வடிவாக நீறும் வகையான பண்ணைநேரே
சாரறு வரைத்து வில்லை சரியானசட்டி
தனிவிட்டு வுப்பு தனிநான்கு படிவிடுகவே. 10

விடவே வறுத்து விதமான தூறில்
விடுபூவு மிட்டு விடமேலை வில்லைவைத்து
திடமாக மூடி திருவான சீலை
திரிநேரு செய்து திடமாயெரிப்பு நூறு

பட்வே பெரித்து பதமாக விட்டு
பதிபா யெடுக்க மதிபோ
லடைவான நெய்யி லதிவிட்டு வுண்ண
அகமான விபாதி போமே. 11

போமேக மேகும் புழுவான வெட்டு
புகழான வெட்டை விரணம்
தாமேகு மெல்லாந் தனியான குட்டந்
தயவான காசமேகம்
காமேகு நோய்கள் கடவிட்டு புக்குங்
கனிவாக புகையிலை தளு
வாமே யுனக்கு வலுவுள்ள நோய்கள்
வகையார முனி பகர்வதே. 12

பேதி அயக்காந்தம்.

அயக்காந்த நேரே யளவாய் நிறுத்து
அதிற்கையா நீரை யடைவாகவிட்டு வரைநேர்
பயமாக வில்லை பதியா யுலர்த்தி
பரிவான நூறு பதிவாக வெருவில்போடு
நயமாக விட்டு நலமா யெடுத்து
நகையான செக்க ரடியான தானிறமதாம்
தயவா யெடுத்துத் தசமாக வாறு
தனியே நிறுத்து தயாய் நறுக்கிபொடியே. 13

பொடிசெய்து சூதம் புலனுக நான்கு
புதிதான கெந்தி பதிவாக முன்னீரையிடு
வடிவான நேரே வகையா யரைக்க
வளமாய்க் கறுக்கும் வகையான ஜாமமேகம்
துடியா யரைத்து தொகையான வாளம்
துரையாயிரண்டு துடியாய் நிறுத்து அரைநேர்

படியான சுக்கு பதமா விரண்டு
பதமான மிளகு பதமிரண்டு தானரையிடே. 14

இடவே கடுக்கா யிதிற்பத்து ஆறு
இதில் நெல்லி முள்ளி இனிதான பத்து ஆறு
திடமாக விட்டு திறமா யரைத்துத்
திரியான கையான் திரமான நீரிலரைநேர்
படமாக தானே பதிவாக வெண்ணெய்
பரிவா யரைத்துப் பதமாக தானுலரவே
வடமாக மூன்று விரலா லெடுத்து [வே.
வகையான தேனில் வழியோடு கொள்ளுமென

எனவேக மூன்று இதமான நாளி
லினிகொள்ள நோய்க ளிதமான புளிபுகையிலை
தனவேக மாகத் தனியாகத் தள்ளு
தயவான நோய்கள் தடையில்லை சோகைபோகும்
வனவேக மேக காமாலை போகும்
வடிவான பாண்டு வகையோடு வாதமேகும்
கனமான பித்தங் கனிவான மாலை
கடலான சூலை கதமான பித்தமறுமே. 16

சுரத்திற்கு மலங்கழிய மாத்திரை.

நாத்தமுந் தாணிரது நல்லகாடியே நான்குபலம்
அரைக்கிறவி சிலமதனை யென அரைநேர்
பாத்துமேதான் கடுக்காய் நெல்லி முள்ளியு
முன்னிடைசேர உடைபோம்பாடு இதில்
முன்னிட தாணியிநேர்
சாற்றிடவாள மூன்று உடைதானே பருப்பெடுநீ
அதையதில் பொடிபட இடஅரை யெனநேர்

வாத்தியே வாளமூன்று இதில் வாக்கானதோ
உடைபோடு தொடியிடு சிறுபயாளவாய் [லெடுநீ
நேத்தியாய் இஞ்சிதனிலிதை நேருண்டை யொ
சுரமறுங் கபம்வீடு மெனநினைநினையே[ன்றிடவே
சித்தமாய் வாதசுரந் துளசிதன்னிலே தானிடவே
அதம் விதம் பதம் அறுபத்து நான்கு சுரம்போம்
நத்தியே சீதசுரமிதில் நாடியே யோடிவிடு
முனிவருள் திருவருள் முறையென வறியே. 17

இலிங்காச அயக்காந்த சிந்தூரம்.

ஜகதலம் விளங்கும் ஜைமினி சொன்ன
நகைமகி மூலகர் நாடியே பார்த்தெடு
அயமுடன் காந்த மதீத நயமென
நயமுடன்பாக நவின்ற சிந்தூரம்
வாதமு மாகும் வியாதிகள் நாசமாம்
சேதம் வராது தெரிந்துகொள் வைத்தியர்

அயச்சிந்தூரம்.

அயமது ஏக மதிவிடு வீரம்
நயமதா யையரை நாடியே யிட்டு
திராவக மதனல் திட்டமா யரைத்து
பராமுக மாகப் பதியவே வறுக்கப்
பவழம தாகும் பதமா யெடுத்துத்
தவடிதாய்ப் பரம தந்திட வைத்து

காந்தச் சிந்தூரம்.

ஓட்டுக் காந்த முண்மையா யேகந்
தாட்டிக மாகத் தடையற நிறுத்துக்
காணக் கியாழம் கடிதாக விட்டுத்

தோணவே யரைத்துத் தொக்கவே புடமிட
அருண நிறமதா மடைவுட னெடுத்து.

அயக்காந்த மிரண்டுஞ் சேர்த்தல்.

தருணமாய் முன்னெடை யயத்தினிற் சேரு
அரைத்துமே யிரண்டையு மடைவாக வில்லை
நிரைத்துமே யொன்றாய் நிலவர மாகவே
வில்லையாய்த் தட்டி விதமான குக்கிடத்
தெல்லையிற் போட்டுத் திரமா யெடுக்கப்
பவழம தாகும் பதியவே வைத்துக்
கவலையைச் சொல்வேன் கருத்துடன் கேளு

இலிங்காச மெடுத்தல்.

லிங்கமுஞ் சரியாய் நேராய் நிறுத்துத்
துங்கமாய்த் திராவகத் தாலே யரைத்து
உமிநெருப் பிட்டு உண்மையாய்க் காய்ச்சித்
தமியவே பொட்டத் தவமா யுதிர்த்துக்
கடமதி விட்டுக் கடமதால் மூடி
கடமதி லுளுந்து சீலைசெய் துடனே
எரியிடு தசமா மினிதுடன் கேளு
தரிப்பதாய் மலருந் தாஷ்டிக மாக
விருப்புடன் பிட்டு விதமாய்ப் பார்த்திட
சிறப்பதாய் மேலே சேர்ந்தே நிற்கும்
கரிபோற் கறுத்து கனக்கவே மேலே
நிற்கு மதனை நேர்மயிற் குச்சால்
தக்கவே யெடுக்கத் தயவாய்ச்சூாண்டு
எடுத்து பீங்கா னிலியல்பெற விட்டு
அடுத்துமே தேய்த்திட வடைவான வாலே
ரசமது வாகும் நலமுள ரசத்தில்

பிசகிலாத் திராவகம் பிலக்கவே விட்டு
வைக்கவே ரவியில் வளமாய் நீறும்
நீறது உபயம் நிலவர மாகவே
பார்த்து முன்னம் பகர்ந்த சிந்தூர
மெடைக்கெடை சேரு இன்பமாய்த் திராவக
நடைபெற விட்டு நலமா யரைத்துக்
கடத்தினி விட்டுக் கடமேற் கடமுங்
திடமதாய்க் கவிழ்த்துத் திட்டமா யுளுந்தால்
நடமிடக்கவச நலமாய்ச் செய்து
எரித்திடு ஏக வின்பமா யுள்ளே
வரித்தியே தீயெரி வளமா யிரத
மேலே யிருக்கும் விருப்பமாய்த் தேய்க்கக்
காலாக வேதான் கடிதான பாத
ரசமது வாச்சு நலியவே கேளு
பிசகிலாத் திராவகம் பிலக்கவே யூற்றி
விட்டுமே ரவியில் விருப்பமாய் வைக்க
கட்டுமே காளான் போலது நீறும்
நீற்றை யெடுத்து நேராங் கடத்தில்
வார்த்தையாய்ப் படியில் வளமாஞ் சிந்தூரம்
சிந்தூ ரந்தனை சிறக்கவே ரவியி
லவிந்திட இருபதி லொன்றிடத் தங்கம்
தங்கமதாகும் தடையிலே பாரு
உங்கட் கிரங்கி யுறுதியாய்ச் சொன்னேன்
விற்றுச் செலவுசெய் திட்டுமே ஞானம்
சித்துகள் யோகம் சிறப்புடன் செய்யவே
சொன்னேன் ரசத்தைச் சுயம்பெறக் கொல்ல
நன்னய மாகு நாடியே பாரு
முன்னமே செய்து முடிக்கப் பலனும்

கன்னல்போ லாகும் கனிவான வாதம்
சொன்ன படிக்குச் சுயமாய்ச் செய்து
இந்நிலந் தன்னி லின்பமாய் வைத்தியந்
தனியே செய்து தாக்கிடச் சித்தி
லிங்க ரசவயக் காந்தச் சிந்தூர
முங்கள் குலத்தி லொருபண வெடையிடு
மண்டலங் கொள்ள மகாவெகு நோய்போம்.

இதற்கு அநுபானமும், அதனாற்றீரும் வியாதிகளும்.

திரிகடு தனிலிடு ஜெயமாம் பித்தமுந்
துரியமாய் நாற்பத் தெட்டு மொழிந்திடும்
பத்தியங் கைப்பும் பதையாமல் தள்ளு
சித்தியாந் தேகஞ் ஜெயமாய் நின்றிடும்
சுக்கு மிளகு வாள மிரண்டு
மிக்கவே கடுக்காய் தானிரண் டாகும்
நெல்லி முள்ளி நேர்பதி னாறு
எல்லாம் பொடித்து இன்பமாய்க் கேளு
கரிப்பா னீரால் காண வரைத்து
தரிப்பா ரவியில் தானிடு காயம்
வைத்துப் பொடித்து வளமாய் வெருகடி
கைத்து எடுத்துக் கனிவா யுளங்கை
நடுவிலே வைத்து நலமாம் சிந்தூரம்
கடுகவே பணவெடை காட்டியே யுண்ண
வுண்டிடும் போது உறவாம் வியாதிகள்
நன்னய மாக நவிலுவேன் கேளு
வாதமும் வாயுவும் வளமாய்த் தானறுஞ்
சேதமாய் மேக வாய்வுகள் போகும்
கால்கைக் குடைச்சல் கனமாம் பீனிசந்
தூலமாய்த் தந்த வாய்வுகள் போகும்

மேக ரணமும் விடுபடுங் குன்மமுந்
தாக மொழியுந் தனியான அஷ்ட
குன்மமும் போகும் குணமுள வவிழ்தஞ்
சூலைவிப் புருதி தொலையும் பெரும்பாடு
வாலையைப் போலே மகத்தான தேகமாம்
கிராணி கழிச்சல் கனமாக நின்றிடும்
வராணி மகோதரம் வடிவாய்ப் போய்விடும்
சயத்திற் கநுபானஞ் சாற்றவே கேளு
பயத்துடன் தூது வளையின் புஷ்பம்
பூவை யெடுத்துப் பெரிய கடத்தி
லாவலாய்ப் பாணி யதிலிடு காலாய்
தேவையாய் வாயில் திட்டமாய்ச் சீலை
கட்டியே மேலிடு கனமாம் பூவை
திட்டமா யதன்மேல் திடமாய்ச் சட்டியை
மூடியே யெரிமேன் முக்கிய மாகத்
தேடியே புட்டாய்த் திடமா யவித்து
நாடியே பிழிந்து நலமாய்ச் சொல்வேன்
பணவெடை சிந்துரம் பதியவே யிட்டு
குணமதாய்க் கொடுக்க குணமுள காசம்
அசுமதாய்ப் போகு மதுபனி ரண்டுந்
தீராக் குட்டந் தீர்ந்திடக் கேளு
நிமிரது எட்டி மரமுடன் றோலை
சீவியே பொடியாய்த் திட்டமாய் ரவியில்
காயவே பொடித்துக் கனமாய் வைத்திடு
நோய்க்கு வெருகடி நுகரவே யிட்டு
சிந்துரம் பணவெடை செப்பமா யிட்டு
விந்தையாய் வெந்நீர் விருப்பமா யிட்டு
குழைத்துண மண்டலங் குறைநோய் குட்டம்

பிழைத்துமே போடும் பிலமா நல்லெண்ணெய்
ஆகா தென்று வரைந்தனர் முனிவர்
தாகமா பண்டம் பௌத்திரந் தீரும்
ஈளை பிரும லெலிகடி தீரும்
கோளைநீ ரிழிவு குடிகெட்டுப் போகும்
விந்து விறுதும் விருப்பமாய்ச் சித்தி
சேர்ந்திடப் பெண்களைச் செயலான போகம்
ஊற்றது போல வூறுமே காமம்
சேர்த்திட வடைப்பு மலஜலம் பிடுங்கும்
வாத மெண்பதும் வகைதொகை நாசமாம்
சேம வளியது சேர்த்திடப் போகும்
பொதிகை மலையில் பொருந்தவே யிருந்து
வதிசய மான கரிசலைப் பாடி
இதையுஞ் சுருக்கி யிதைமுப்பத் தாறாய்
விதமுடன் பாடினேன் விருப்பமாய்ப் பாரு
மாமுனி யருளிய மாலிங்க ரசவய
கோமுனி காந்த சிந்தூர மிதனுமே.

நாக பஸ்பம் - வேறு.

நாகமது பலமேக நாடிகட மிட்டு
நலமா யுருக்குமுகந் தன்னிலுபய மிளகு
வேகமா யுருக்குமுகந் தன்னிமேல தாவு
வித்தகமாய் நீறியது முத்துபோ லாகும்
ஆகுமது நாகமதை யளவாய் நிறுத்து
ஆதிபினி ரசமதனை திரியேகம் விட்டு
சோகமென வெடியுப்பு தீநீரை விட்டு
சுத்தரவி தனில்வைக்க பூர்க்குமது பாரே. 19

பூர்த்தரசந் தன்னிலெடை நாகபற்ப நிறுத்து
பேரான திராவகத்தா லரைகடந் தன்னில்

சேர்த்துமே யெரித்திடவே ஜெயமாக வேறும்
ஜெயவேதை யேறினதை வழித்துபுகை நீரால்
பார்த்துமே நீர்விட்டு ரவிதனிலே வைக்கப்
பதிவான ரசநீறு பக்குவம தாகுங்
கார்த்துமே யடிநின்ற வாசுகிபற் பத்தில்
கனிவாகச் சேர்த்தரைத்து கடமதினி லேரியே 20
எரித்திடவே யிப்படியே ஐந்துமுறை செய்ய
இயல்பாக ரசந்தானு மடியிலே நிற்கும்
வருத்திடவே செம்புதனில் நூற்றொன்று இடவே
வகையான ஆணிக்கி யெட்டரையே காணுந்
தரித்திடவே யிதைவைத்து ஞானவழி பாரு
தருவான சுழுமுனையில் வலுவாக நில்லு
கருத்திடவே கைபாகந் தப்பினு லாகா
கருணைபெறப் பாகமாய்ச் செய்திடவே சித்தி. 21

இதனுற்றீரும் வியாதிகள்.

சித்தியாம் பணவெடை தாநித்த மண்டலமே
சிதறாத வலிகுன்மம் பித்தமுதல் போகும்
நத்தியே காசமுதல் வாதமுதல் தீரு
நலமான மேகரணம் மேகவாய் வெல்லாம்
முத்தியே பெருவயிறு தந்தமுதல் வலியு
மூனையான மகோதரமு முதிரவலி தீருஞ்
சத்தியமா மிம்மொழிக ளாகுமது பாகந்
தவறாமற் செய்திடவே மாமுனிவர் சொல்லே.

தாம்பிர ரசச் சிந்தூரம்.

பொடிரவி ராசனன்னை போமனை மூன்றுநேரே
யிடுவன சங்கநீரு யிதையறை வில்லைசெய்து
யினிரவி காயவைத்து

நடையிடு புடமதாக நவிலவே பவழமாகும்
மதையெடு வேகமாக வன்னியும் பாகமாகும்
வனுவுள புகைநிறுத்து வருநிலப் புகையுமாகு
முன்னியே கடமுமிட்டு முறுதிபி லெரிக்கவேறு
முண்மையும் வாலையாகும்
உறுதியாய்ப் பீங்கானிட்டு வுறுபுகை நீரையூற்றி
வுக மதில் நிறம தாகும்
வருமென கடமுமிட்டு வகையதா யெரிக்கவேறும்
வழி யது யெடுத்து மைந்தா
நலமுடன் ரசமதாகு நவிலவே புகைநீ றூற்று
நலமுடனீரில் கந்தம் கலயதில் ரவிசிந்தூரங்
கடுகவே யரைத்து வில்லை
கனமதாய்க் கடமுமிட்டு வளமதா யிதுபோலைந்து
வகையதா யெரித்துப் பாரு
ஜெகதலம் பவளமாகுஞ் சேருமே ரவிநூறொன்றி
அகமது பத்துமாற்று அதிசய புடமிறங்கும் [ல்
அலம்வரு ஞானயோக மதில்வெகு நயமதாகு
மணுகிடில் மேகவாயு வதுபொடி கர்மமெல்லா
மலம்வரும் வாதமேக மதில்வரு பித்தமேகந்
தணலது மேனியாகுந் தணிமகோ தரமுமேகுந்
தகைபெறு காசம்போகுந் தடையிலை காயசித்தி
கனல்ரவி பிரதமான கடிதொரு சிந்தூரந்தான்
கதிபெறு மாமுனிவர் கனிந்துதா னுரைத்தசொ
[ல்லே. 23

வாளபேதி மாத்திரை.

ஆதி மாமுனி யருளிய கரிசல்
நீதியாய் முந்நூற் றறுபதிற் சுருக்கி

வேதபாராயண முப்பத் தாறுய்க்
காதலாய்ப் பாகங் கைமுறை சரியாய்ச்
சொன்னதிற் சூத்திரஞ் சுருக்கம் பெருநூல்
நன்னய மாக நவின்றெடுத்துப் பார்த்துச்
செய்திடச் சித்தி ஜெகமுறை வைத்தியம்
பையவே பேதி வகையாகச் சொன்னதில்
பச்சை யென்பது பதிவான வாளமாம்
இச்சையாய் வறுக்கச் சொன்னது வாளம்
இதுவிரண் டொன்று இனியரச வாதிகேள்
பதிவாய்க் கையின் பாகம தறிநீ
அறிந்திடப் பாக மடைவது கேளு
பிரிந்திடச் சொல்வேன் பிசகற வைத்தியா
வேர்க்கொம்பு திப்பிலி மிளகினோ டிந்து
தேர்கடுகு ரோகணி சிவதைபோ டெருக்கும்
பார்வன்னி யொன்று பதமா யெட்டிற்கும்
சேர்சரி வாளம் ஜெயமா யரைக்க
காம்பழச் சாறு கடியவொரு ஜாமம்
விட்டு அரைத்திடு விதமாய் நாளுங்
கட்டுமே குண்டு மணியின் விரையா
யுருட்டி ரவியி லுண்மையாய் வைத்து
வுருட்டியே முழுதாய் வாகா யுண்டிட
உள்ளே சென்று உண்மையா யுண்டை
கரைந்து கரைந்து கனிவாய்ப் பேதியாம்
உண்டிடு வுண்ண முறுதியாய்ப் பேதி
கண்டித மான நெஞ்செரி யாது
வாந்திபண் ணாது வகையாய் மலஜலம்
சேர்ந்துமே வழுகும் ஜெயமான பேதியாய்
பேதியு நிரப்பப் பொருத சரீரம்

ஆதியாய்ப் பாலிற் கஞ்சியுங் கூட்டு
கூட்டவே நிற்குஞ் சுமங்குளிர் சூலைபோம்
ஆட்டவே வாத வெண்பத்து நாலறும்
பெருநூல் கரிசல் பிரபல மாகவே
சிறுநூல் சொன்னேன் சுருக்கத்திற் சுருக்கிப்
பாடினேன் முப்பத் தாறுடன் சுருக்கம்
பெருநூல் சிறுநா விரண்டையுஞ் சோதி
திருவான பாகஞ் செய்திடச் சித்தியே. 24

சிங்கமுகத் திராவகம்.

சித்தியாய்த் திராவகஞ் செய்திடக் கேளு
முத்திசேர் துருசு முடிவதாய் நிற்கும்
பெருநூல் திராவகம் பேதமா யொளிக்கதில்
சிறுநூல் சுருக்கஞ் செயலறப் பார்த்து
திராவகம் வைத்துத் திட்டமா யுபாசம்
பராமுக மாகப் பதையாமல் நீற்று
சிங்கமுகத் திராவகம் திரமாய்ச் சொல்வேன்
உங்கள் குலங்க ளுறுதியாய் வாழ
ரசமது ஏகப் நவிலவே சேரு
பிசகிலா வுப்பு பெரிதா யரைத்து
செங்கல்மா நான்குக் கொன்று சேர்த்து
துங்கவே யரைத்துத் துப்பற வாக
சட்டியி லிட்டுச் சதிபெற வதன்மே
லிட்டமாய் ரசத்தை யினியவே யிட்டு
மேலது மூடி விருப்பமா யுளுந்து
சீலைசெய் யேழ ஜெயமா யடுப்பில்
வைத்துமே யெரித்திடு வாகாய்ப் பனிரண்டு
செத்துமே யேறும் ஜெயமுள பஸ்பமாம்

எடுத்துமே வழித்து இன்பமாய்க் கேளு
அடுத்துமே வெடிதச மன்பாய் நிறுத்து
ரசமா வுப்பையு நவிலவே நிறுத்து
செகிலா சீன விருபத் தைந்து
மூன்றையு மொன்றாய் முடியவே பிடித்துத்
தோன்றவே சக்கர வாலைபி னடியில்
போட்டுமே பரைகடம் பொருந்தவே மூடி
காட்டுமே தீபங் கமலங் காடாக்னி
உளுந்து சீலை யுறுதியாய்ச் செய்து
அழுந்தவே வாலை மூக்கினி லரக்குக்
குப்பியை யுள்ளே செலுத்தி யெரித்திடு
திராவக மிரங்குந் தடைமுன் னீரும்
பராமுக மாகப் பதியவே வெள்ளையாம்
ஊற்றி டேன மூற்றிப்பின் நீரை
யேற்றி யேயெடுத் தினியகண பதியைத்
தோத்திரஞ் செய்து தொகைபது கேளு
பாத்திர மாகும் பதியவே யேமமாம்
அகமதி விருந்து அன்புடன் பூசி
ஜெகமதி லோக மெல்லாம் நீறும்
வகையதாய்த் திராவகம் வைத்திடச் சித்தி
தொகைவகை யாகுந் தொல்லுல குள்ள
உபரச மெல்லா முறுதியாய் நிற்கும்
பலமான திராவக மிதுதான்
கும்ப முனிதான் கூறின திராவக
மன்பதாய் வைத்திடச் சித்திய தாமே.

வீரசுமும்-வீரச பஸ்பமும் சிந்தூரமும்.

வீர ரசத்தை விருப்பமாய்க் கேளு
கோரமாய் விபாதி குடிவிட் டோடும்

வாதமு மாகும் வசியமு மாகுஞ்
சேதம் வராது ஜெகதலம் விளங்கும்
அரைக்கையில் வீர ரசம தெடுக்க
முறைப்படி சொல்வேன் முக்கிய மாகும்
வீரந் தசமெடு விருப்பமாய்த் தானே
தாரமாய்த் தண்ட வாளமு மிரண்டு
உடையரை யிரண்டு முறுதியாய் ரசமாந்
தடையது படாமல் தானே கக்கிடும்
கக்கின ரசத்தைக் கருணையா யெடுத்து
மிக்கவே வுப்பி லெரித்திட வேறி
வெள்ளையாய் நீறும் விதமாய்ச் சுரண்டி
துள்ளவே பணவெடை தூக்கிவெல் லத்தி
லிட்டிட நோய்க ளெல்லாம் போகும்
துட்ட ரிடத்தில் சொல்லவே வேண்டாம்
வயித்திய நல்ல முறையிது சத்தியம்
பயத்தினாற் செய்தால் பலிக்கு மவிழ்தம்
வீரபஸ் பத்தில் விதமான திராவகங்
காரமா யூற்று கருத்தாய்க் காய்ச்சி
மேருவி லிட்டு விதமா யெரித்திட
பாருமே பவழம் பதியவே யாகிடு
மண்டல முண்டால் மகாரோகம் போகும்
தொண்டருக் கருளின் தொல்லுல குள்ளோர்
ரவிநா ளென்றில் நாட்டிடத் தங்கமாம்
கவியவே யிந்தக் கணக்கையும் பாரு
வீர சிந்தூரம் வித்தையி லதிகம்
பாரமாய்ப் பார்க்கப் பதியவே சித்தி
வடநூல் கிரந்தம் வகையுடன் பார்த்துத்
திடமாய்த் தமிழால் திட்டமா யெடுத்துச்

சொன்னேன் மாமுனி சுருதி புலத்தியர்
நன்னய மாக நவின்றசிந் தூரமே
ஏம மோர்நிறை யின்பமாய்த் தான்ரவி
வாம மாகவே வாகா யுருக்கிநீ
காம நாகமுங் காட்டிடு வீரமுந்
தோமம் வேதைபாந் தொக்கலே பாருமே.

வீரத்திராவகம்.

வீரத் திராவகம் வித்தையினி சொல்வேன்
காரமாய்த் தானே கடிசெலா நீறும்
வெடிபலம் நூறு விதமணி சீனம்
படிபோல் நிறுத்துப் பகரெடை சரியாய்
வீரமு மிருபத் தஞ்சுடன் போட்டுக்
காரமாய்ப் பொடித்துக் கணக்கது கேளு
வாலையி லிட்டு வகையாய்க் கடமரை
பாலை யடுப்பின் பிரியவே யிட்டு
வடித்திடு திராவகம் வகையாய் முன்போல்
துடியா யெடுத்துத் தூக்கிட அரக்குக்
குப்பியி லிட்டுக் குறுநாமாய்க் கேளு
தப்பியே போகா தானது பாகமாய்ச்
சரச்கெலாங் கட்டுந் தானது நீறும்
பார்க்கவே பெருமை பகர்தல் முடியா
பாஷாண மெல்லாம் பதைபாமல் நீறும்
தேளா முபாசங் தென்பாய் நீறும
திராவகம் போலே தாக்கிடச் சித்தியாம்
பாாமுக மிலாமற் பதமாய்ச் செய்திடு
எல்லாமுங் கட்டு மினிது புலத்தியர்
சொல்லாற் பெரியோர் சொன்னது புத்தி

உப்பி னாலே உறுதியாய் வாதமாந்
தப்பித மில்லை தான்சத் தியமாம்
முக்கிய மாக முன்னே வைத்திடு
மிக்கவே யெல்லாம் விரும்பியே யாகுந்
திடமாய்த் திராவகந் திட்டமா மூலிகை
வடம சாறு வகையான மூன்றுநா
ளிட்டு மேபிழிந் தினிதான் சரக்கைத்
தொட்டிடக் கட்டுந் துடிப்புடன் வேதை
யாகுமே பாரு அதில்வருஞ் சித்திபா
துரிசின் போக்குத் தொகையாய்க் கேளு
பரிசின வேதை பார்க்கவே சொல்வேன்
துரிசையிந் நீரில் துடிப்பறத் தோய்த்து
வரிசையா யெட்டு நாளது போட்டிடும்
பொருமியே நீறும் பொருந்தவே வங்க
மருமையாய்ச் சுன்ன மடைவது கட்டுங்
குக்கிட புடமிடு கொடூரமாஞ் சுன்ன
மிக்கதோர் சூத மிகநல் லேவல்
கேட்குமே கட்டுக் கெவனமாங் குளிகை
தனக்குமே பணிவெடை தந்துவாய்ப் போக்கும்
நவலோக மொன்பது நாடியே தங்கமாந்
தவப்பல னாகுந் தர்க்கம்பே சாதே
தாளகந் துவைத்திடு தாக்கவே யெட்டு
வாளகம் போலே வலுவாய் நீறும்
செம்புநா ளுன்றில் சேர்த்திடத் தங்கமாம்
வம்புசெய் யாமல் வகையுடன் பாரு
கெந்தகம் வீரங் கெடியான பூரமுந்
தந்திடு மநோசிலை தக்கதோர் வெள்ளையு
மிப்படி நீற்றிட யின்பமா யேமமாந்

தப்பித மில்லை தானே நீற்றிடும்
வாழ்வு முனக்கு வகையாய் நின்றிடும்
தாழ்வு வராது தாழ்ச்சியு மில்லை
தங்கமு நாகமுந் தானறி வங்கமு
மிங்கித மாக இயல்பாய்க் கரும்பொன்
செம்பு மிப்படி ஜெயமாய் நீறிடும்
நம்பியே வாத நாடியே நின்றிடுஞ்
சமுமுனை தன்னில் சொக்கியே நின்றிடும்
பணிவொடு பாரு மதத்தால் கெடாதே
வாதி வாதி வளமாப் பேரெடு
ஊதி யூதி யுறங்கவே வேண்டாந்
திராவகத் தாலே சகலமு மாகும்
பராமுக மாகப் பலிக்கா தென்று
நாவினாற் சொல்லி நவில வேண்டாம்
மாமுனி அகஸ்தியர் வடமொழிக் கிரந்தங்
கோமுனி சொன்ன கொடியபுகை நீரே.

ரசச்சிந்தூரம்.

சோதிரசந் தனையே சுத்தி செய்து
தூசணி பீங்கா னிடுபலந் தசம்
கோட்டை யிடிக்கும் படைராசன் பத்துங்
கூட்டிடு சீனமது
ஐயைந்துபலந்தான் பொடிபண்ணிவாலைசட்டியிடு
சக்கரமேல் கவிழ்த்து உளுந்தாலே சீலைசெய்து
உறுதியா யுண்டெரி தீகமலம்
புகைவரும் வெள்ளைப் புகையைத் தள்ளி
நடு நீரை வித்தகமாப் பிரித்துக்
கடைநீ ருகாரந் தானீரை யெடு
ரசமீ திட்டு ரவியில் வைக்கத்

தானது பற்ப மாகுமெடுத்துப் பின்
நீர்தனையிட்டு வைக்க நீறியிடும்
பின்னெடு பற்பமெலாங்
குப்பி யடை மீதிடுதான் கடத்தில்—உப்பு
இடுநால் விரல்செலுத்தி இதின்பேரில் தான்குப்பி
தானடுவில் வைத்துமேலே தான்கட மேல்கவிழ்த்
உழுந்துமண் கெட்டியாய்த் தான் கவசம் [து
பிலக்கவே செய்திடுஆறு நாளுயரவே தானேறி
மேல்சட்டியிற் பிடித்திடுங்
கையினுல் தான்சுரண்டிக் குப்பி யடைதனில்
சிவந்திருந்த மருந்ததனைச் சேர்த்து அரைத்திடுநீ
புகைநீரைவிட்டு ரவிதனிலே காயவைத்துத் தானெ
முன்போ லாறுதினந் திட்டமாய்த் தானெரிக்க [ரி
சிவந்திடு மிப்படி யைய்ந்து முறைப்
பாகமாக வின்பமாய்த் தானெரிக்கக் [தானே
கடைசியில் சிந்துரந்தா னெட்டுக்கொன்று தங்கந்
உருக்கியிடு நாகமொன்று சேர்த்திட வெள்ளை
[யாகுஞ்
சிந்துரத்தில் தானினிச்சேர்த் தரைத்துக் குப்பி
தானே யெரித்திடுநீ பவழமாம் [யிட்டுத்
பாகமாய் மண்டலஞ் செயரசஞ் சாகும் [போகா
நாயமார் கற்பனையை யொருவரால்நாம் மதிக்கப்
புவிதனி லொன்பது லோகத்திடு [கும்
தனித்தனி கொடுத்துமே நூற்றென்றில் தங்கமா
இங்கிதமாக வெடுரச வாதஞ் சித்தியே
ஏவல் கேட்கும் புலத்தியா [ய்க் காயசித்தாம்
உண்டிடுமண்டலம் திண்பணவெடை யுண்டையா
கதிர்மேனி செங்கதிர் போல் நிறமாம்

வலிகுன்மந் திட்டமாங்
காசமுதல் தலைவலி
வாதமெண்பது போம் பித்தமுதல்
வாகான தந்தவாயுவு அண்டவாயுவு போகுமே
ஜன்னிமுதல் திருமேனி மாந்தளிர்போல் நிறமாம்
ஜகதலமுன்னே வணங்கியிடும் இதுரசந் தானே
திராவகத்தால் மடிந்திட்ட தானெனச்செம் பிற்
நொடிதனி லேமமு மாகிவிடும் [பட்டால்
இதுநலங் கைப்புப் புளிப்புத் தள்ளு
இதையுண்ணு காயமுங் கற்றா ணும்
விந்துகட்டும் மானுடர் புத்தி யில்லார்
பாகமாகச் செய்திட மாட்டா மலே
சூத்திரம் பொய்யென்று சொல்லுவார் பார்
வாதம் பொய்போனற் சொல்லக்கேளு
உலகத்தில் தான்சிவர்தான் பாமும் பொய்யாகும்
வேதமுஞ் சொற் பொய் யாங்
குருமுனி மாமுனி சொன்னது தான்
சூத்திரத்தில் தான்மொழி சத்தியம்.

வேறு ரசத்திராவகம்-வேறு.

நலமதா யெல்லாம்
பிசகிலாநீர் பெருமையைக் கேளு
எல்லாம் ரவிதனி லின்பமாய் நீறுஞ்
சொல்லாற் பெரியவர் சித்தாம்
ரசத்தி ராவகம் பகர்ந்தா ரதுகேளு
பராமுக மாகப் பதியவே பாரு
வெடிதச நிறுத்து விதமாய்ச் சீனம்
படியை யைந்து பாய்ச்சி நிறுத்திடு
வாலையி லரைக்கட மாகவே பொடித்துப்

பாலையிற் போட்டுக் கனிவாயுளுந்து மண்
சிலையுஞ் செய்து சிறுகவே தீயெரி
பாலையின் முக்கால் வடிந்திடும் வெள்ளைநீ
ரெடுத்துமே தள்ளி யிதமான மஞ்சள்நீர்
அடுத்துமே பிடித்து ஆண்மையைக் கேளு
சுத்த ரசமது ஏகமும் நிறுத்துப்
பத்தியாய்ப் பிடித்துப் புகைநீ ரெல்லா
மூற்றியே மூன்றுநா ளுண்மையாய் நிழலி
லேற்றியே வைத்திட யிதமாய்க் கரைந்து
தண்ணீர் போலாந் தாக்கவே கேளு
மண்ணியே மறுமுறை வாகாய் வெடியுந்
தசமது நிறுத்துத் தாக்கிடச் சீனம்
பிசகிலா யிருபத் தைந்துடன் பொடித்துக்
கடமதிலுருக்கு கிளரவே வெள்ளை நீர்
விடமதாய்ப் போக விட்டுமே பாரு
மஞ்சட் புகைவரும் வருகிற வப்போ
துஞ்சவே யெடுத்து ஆறவே வைத்து
ஊற்றிட முன்புகை நீரதை யதிலே
ஏற்றிடு அடுப்பினி லினியதோர் வாலை
சட்டியை மூடு சடுதியா யுளுந்துமண்
கெட்டியாய்ச் செய்து கிருபையா யெரித்திடு
வாலை மூக்கில் வளமாய்க் குப்பியை
வேலையா யிட்டு வைத்திடு வைத்தால்
புகையும் படாமல் புதுதிரு மேனியி
லிசவா யிருந்திடு யின்பரச வாதி
பட்டால் புகையும் பட்சம் விரிந்திடும்
கெட்டுமே போகாக் கிருந்திடு யிப்படி
ஐந்து முறையது வெவ்வே றாகச்
சொற்படியாகச் சுருக்கமா யுருக்கி

முன்புகை போக முடிவாய் மஞ்சள்
தென்பதாய்க் கண்டு திட்டமாய் முன்ரசத்
திராவக மூற்றி ஜலுதியாய் வடிநீர்
திருவருள் பெற்ற திராவக மாகும்
பிரஹ்மா விஷ்ணு ருத்திர னாகும்
ஆகுமே திராவக மடைவதுஞ் சொல்வேன்
அரக்குக் குப்பியில் வைத்துமே வைத்து
சிறக்கவே கேளு திட்டமாய் வேகந்
தங்கங் காரீயந் தயவுள்ள பித்தளை
யிங்கித மான செம்பது நீறும்
ஒன்பது லோகமு முண்மையாய் ரவியில்
தென்புட நீறுந் திருநட மாகும்
புகைநீர் வைத்துப் பொருந்தவே நீற்றுத்
தகையாது செல்வந் தானென்ன வருமே
மூலிகை தன்னில் முடிவுட னீற்றல்
கேலியாய்ப் பொய்யாம் கிருபையு மில்லை
தாம்பிரந் தன்னைத் தண்மையாய் மூலிகை
வம்பாய் நீற்றல் வருகா தப்பா
அண்டச் சுன்ன மடைவுடன் பண்ணி
தெண்டமாய்த் தாம்பிரப் பொடியில் சேர்த்து
அரைத்துமே வெண்கரு வாலே வில்லைசெய்
விரைந்துமே யூத வெள்ளையா யிருக்குஞ்
சுன்ன மிதுதான் சுருக்கமாய்ச் சொல்வார்
நன்னய மாக நாடியே பணத்தைப்
பிடுங்குவார் பாரு புத்திபா யிருநீ
திடங்கா ணின்னொரு தாம்பிரஞ் சொல்வேன்
அடமது சொல்லி அடைவாய் வங்கக்
குகையது பண்ணி யுள்ளே செலுத்தி

வகையாய்ப் புடமிடு வாகாய்த் தூக்கிக்
காட்டுவர் வெள்ளையாய்க் கண்மயங் காதே
தேடே னென்பார் திருடுவர் வாதி
ரவிபது நீற்ற நலமு டனுபாயங்
கவியவே சொல்வேன் கணக்காய்க் காய்ச்சித்
தோய்த்திட வெட்டையாய்த் தொக்கவே செய்து
பாச்சிது சுன்னம் பதிவுடன் கட்டினால்
நீறது வாகும் நினைவுடன் சோதனை
பார்த்திட விதனில் பலமா வாகும்
இப்படியாக வியல் பெறச் செயாமல்
தப்பித மாகத் தான்மேல் கட்டினால்
எப்படி நீறு மினிரச வாதிகாள்.

அப்பிரகச் சிந்தூரம்.

அப்பிர சத்தை யடைவுடன் வாதி
தப்பித மாகத் தான்மூ லிகையி
லரைத்து நூறு புடமிடப் பவளமாம்
நிரைத்துமே யுருக்க நிச்சயந் தளுக்காம்
இருக்குமே மின்னி யினிதாஞ் சோதனை
பெருக்கவே காட்டுவர் பிரட்டுரச வாதி
சத்துருச் சரக்கால் தகித்தால் தளுக்கில்லை
மித்துருக் கூட்டில் வியாதிகள் போகும்
இப்படி யிருக்க இதமாம் பாகந்
தப்பற மூலிகை தன்னால் அப்பிரக
மெப்படிச் சாகு மினிது புலத்தியர்
பெருநூல் தோறும் பெரிதா மூலிகை
பெரிதெனச் சொன்னேன் பலமாய்நம் பாதே.

காசிபர் காதை.

காசிப ரிஷியுங் கனக்கவே வங்கம்
வாசனை யாக வளமாய் நீற்று

துரிசின்மேற் கட்டித் துடிப்பற நீற்று
வரிசையாய்க் கவனம் வடிவாய் ரசத்தைக்
கட்டியே கவனங் கனிவா யேகயில்
திட்டமாய்ப் பொதிகை கடந்துமே யப்பால்
தேவனும் பட்டணந் தெருவுக ளதிகம்
ஆவலாய் மறையோர் அறுநூறு வீதி
இப்படி யிருக்குந் தெருவொரு வீதி
தப்பித மில்லாத் தானொரு பிராமணன்
வீட்டிலே சென்று விரும்பியே பேச
தாட்டிக நூல்களாய்த் தர்க்க வாதிகள்
வெகுநூல் பார்த்து விருப்பமாய்ச் சரக்குத்
தருமா சுண்ணந் தடையற வைப்பவ
ரவரிடங் காசிப ரிஷிசொலும் வித்தை
ரசத்தை நீற்றில் வெண்மையாய்ச் சொல்ல
பிசகறத் தாம்பிரஞ் சுன்னமும் வைப்பே
னென்றுமே சொன்னு ரிணையடி தொழுமறை
யன்றுமே பிராமணன் அப்படி நம்பக்
காசிபர் வங்கச் சுன்னத்தைக் கையில்
வீசியே யடக்கமாய் வைத்துமே சென்று
வாக்கினில் வந்த மூலிகை கொண்டா
வென்றுமே சொன்னுர் இதைநன்ருய் நம்பி
கொண்டுவந் தார்மறை யோர்களு மப்போ
பண்டுமே வங்கஞ் சுன்னங்கா ணமல்
மூலிகை தன்னை முடிவற வாங்கி
கேலியாய் வங்கச் சுன்னத்தை யிட்டுப்
பிழிந்துமே செம்பு துரிசில் கலக்கவே
நீர்வடிந் ததுமே வகையறி யாமல்
மூலிகை தன்னில் நீறுஞ் செம்பு

என்றுமே நினைத்து இசைவாய்த் தெரிந்து
போச்சுதே யென்று போனபின் மூலிகை
வாச்சுதே பிரிய வாக்கான செம்பு
நீறவே யில்லை நினைவுதடு மாறி
யேங்கியே திரிந்தா ரிதமாய்ப் புலம்பி
தாங்கியே கண்டது பொய்யோ யில்லை
நாய்தான் கடித்த வெள்ளெலும் பதுபோல்
பேய்போ லலைந்து பிதற்றித்திரி யாதே
தாயக மாகத் தர்க்கிக்கா தப்பா
வாதத்தை நிறுத்த வண்மையாய்க் கேளு
வெடிசுன்ன வுப்பினால் வங்கத்தை நீற்று
ஆதர வாக வப்புறந் துரிசை
நீதமாய் நீற்று நிலவா மாக
அப்புறம் ரசத்தை யடைவுடன் கட்டு
துப்பறக் கவனந் தோன்றியே நாட்டு
என்றுமே மெய்போ லிசைவாய்ப் பெரியோர்
தன்றுமே மலையிடம் நலமாம் வங்கஞ்
சுன்னமுஞ் செய்வார் சுருக்கமாய் மாநுடர்
ஏங்கவே மூலிகை யிட்டுமே பிழிவார்
தாங்கவே மாநுடர் தலைசெரி யாமல்
வனமூ லிகையில் வகையற நீறக்
கனமாய்ச் சொல்வர் கருத்தைநம் பாதே
நம்பவே யென்ன வென்றது கேளு
உப்புத் திராவக முண்மையாய் நீறின்
அப்பினில் வேதையா மளவுகொள் ளாது
உப்பினில் வேதை யுபருமே பாரு
தப்பியே யுப்பை விட்டா லவன்கையி
லொன்றுமே யில்லை யுறுதியா யெனவே

கொண்டுமே பாரு குணமிலா வாதி
அகண்ட பூரண மடுத்துமே நோக்கு
நிகண்டு பாரு நிலவா மாகும்
அடுக்கு மாறு தலத்திலே நிற்குந்
தடுக்கவே யக்ஷரஞ் சுருதியைப் பாரு
சித்த ருரையுஞ் சிதம்பரந் தன்னில்
பத்தனீ ரேகி முனிவரைக் காணு
சிற்சபை தன்னைச் சிறக்கவே தெரிசி
மாமுனி சொன்ன வாகான கரிசலில்
கோமுனி சூத்திரக் கணக்கையும் பாரே.

தாம்பிர பஸ்பம் - வண்ணம்,

செம்பு யேகமுந் தானெடு தகடடி
வம்புலாவியே வெடிபடி கையுமுடன்
நம்பியே திரியரை வளிகத்த நீராலே

வம்பு லாவிய நீரது தன்னிலே
தென்ப தாகவே தான்கரி வோடதி
லெம்பிரா னருள் காய்ச்கியே தோய்த்திட
வெட்டை போலாந்

துன்ப மாகவே சினமு மூதிடு
நன்பதாகவே நீறியே சுண்ணமாம்
வன்பதாகவே நான்கினி லொன்றைத்தான்
வீரம்போடு

வன்பு போலவே தான்குழை ரவிதனில்
தென்பதாகவே மேலிடு கவசமாம்
நன்மை யாகவே புடமிடு நடைபுடஞ்
சங்குபோலாம்

ஆதியாகவே தானெடு பணவெடை
சோதியானதோர் பணமதில் விடவது
வேதியாகவே யுருகிடு மதுபனங்
காய்போலாம்
நாதியானதோர் பணவெடை ரசமதில்
சேதியாகவே யிட்டிட ரசமது
நாதியாகவே கட்டிடு ரசமணி
கவனமாம்
வேதிபேதியாந் தங்கம தாயிடு
மாதிமாமுனி யருளிய கரிசலின்
நீதியாகவே பாகமாய் வைத்திட
குருவதாமே.

அண்டோடு சுண்ணம், படிக்காரச் சுண்ணம்,
வெள்ளிய ரசங்களைச்செய்து வேதையாட.

அண்டோடு அரைத்திடு வெண்கருவால்
கண்டேகரி தன்னிலே யூதிட
வென்றேயினி தானது நீறிடுந்
தந்தம்போலாஞ்
சென்றேயெடு சீனமுமேக மென
அன்றே பொரிதானது நீரறும்
கண்டேயரை வெண்கரு தனிலதை
வடிவாகக்
கண்டேயதை கரிதனி லூதிட
தொண்டேயது தான்கடுஞ் சுண்ணமாம்
அண்டோடுட நீறுடனே
யிடைசேரு
தானேஅரை வெண்கரு தன்னிலே
மானேயொரு வில்லையா யூதிடு

தானேயது நீறிடுந் தான்கடுமை
நலமாக
கோனேயிதில் பொட்டலை தானெடைசேர்
கானேயரை வெண்கரு நீரிலேதான்
மானேயிதை வில்லையா யூதிடவே
கொடி தாருந்
தேனேயெடை வெள்ளியந் தானுருக
மானேயிதை யுருகிட வீந்திடநீ
கானேரசஞ் சேர்த்துமே யந்திடையே
கனிவாகச்
சீனம்வெடியோ டதுதான் திரிநேர்
கானல்படல் தானது வங்கரசந்
தானல்புடல் தான்சரி நேரிடுநீ
யரைஜாமங்
கோனேயென தானதுவில்லையு நேரே
மானேயிதை ரவிதனில் காய்ச்சிடு
வானேயிதை யஞ்சது சுன்னமுளே
பதிமூடு
ஊனேயதை தானது குக்கிடமுங்
காணப்புடம் போட்டிடத் தான்சிவக்கில்
வேணப்படி முன்முறை சுண்ணமிடு
வெள்ளைபோலாங்
காணே யதைக் கண்டிடக் கலியதுதான்
வேணப்படி யாகுமே நீல நீறும்
பொன் ரசங் சட்டிடும்
கவன மேமே மாகும்

அநுபவந் தானது தங்கமாகுங் காணுமே
லோகமு நீறிவிடுந் தானுஞ்சொற் பார்த்திட
பாகமது செம்பு நீறும்.
பாகமது இருநூறு அஞ்சதனில்
யோகம் பரிபாஷையாய்ச் சொல்லிடவே
தாகரச வாதிகள் பாகமது செயமாட்டாது
ஆகமுனி மாதவர் சொன்ன நீதி
வேகம்பட வைத்திட யிரதமுமே
யோகம் வரும் ஞானமு மோதிடுமே
கிரிகை யாமே. 25

வியாதிகட்கு இலிங்காச பஸ்பத்திற் கநுபானம்.

இலிங்க பற்பத்தை நினைவாய்க் கொடுக்க
துங்கமாய்ச் சொல்லுவேன் சூத்திரந் தன்னில்
பேதியே யானால் பெருமைபாய் வெல்லத்தில்
நீதியதாக நிமிஷத்திற் பணவெடை
மூன்றுமே கொடுக்க முதிருமே ஜன்னி
தோன்றியே போகுந் துபாமாய்ப் பாரு
சூசிகா வாய்வு சுகமதாய்ப் போகும்
ஆசையாய் மலஜலம் விடாதே போனால்
வன்னி பஸ்பத்தில் வகையாம் வாளமும்
உன்னியே பத்திற் கிரண்டுமே சேரு
அரைத்துமே பொடியா யதுபண வெடையாய்
நிரைத்துமே கொடுநீ நிஜமதாய்த் தீருஞ்
சூசிகா வாயுவில் சுருக்கமாய் மலஜலம்
ஆசியாய்ப் போனால் அடைவுடன் வாளஞ்
சேர்த்துக் கொடாதே சும்மா கொடுநீ
பார்த்திடும் பண்டிதங் கட்டவும் விடவுஞ்
செய்துமே மருந்து வெவ்வேறு செய்திடு

உடலுறும் வியாதி யுற்றுமே போகுந்
திடமாய் மலஜலந் திட்ட மாய்விடின்
வியாதிகள் போகும் மலஜலம் விடாதால்
வாய்வுக ளுள்ளே மருவியே நின்று
தாயாதி யாகச் சத்துரு பண்ணுஞ்
சோகை தந்த வாய்வுகள் போக
ஆசையி னுலே யடைவுடன் கேளு
அயச்சிந் தூர மறிவுட னெடைக்கு
நயமாய்ச் சேர்த்து நலமா யுரைக்க
எட்டுக் கொன்று இன்பமாய் வாளந்
தொட்டுமே யரைத்துத் துயரமாய்க் கொடுநீ
சோகையுந் தீருஞ் சொஸ்தமாய்ப் போகும்
ஆசையி னுலே அறிவுடன் பாரு
சோகையில் மலஜலம் விட்டா லவர்க்குப்
பாகமாய் வாளம் பகரல் சேராதே
காமாலே போகக் கடுகவே கேளு
நேமமாய்க் கீழா நெல்லியின் சாரு
ஆமமாய்க் காற்படி யாவின் பால்காற்
சேர்த்துமே யெடைக்கெடை ஜெயமுள வன்னி
பார்த்துமே பஸ்பம் பணவெடை யிடவும்
ஜாதியா மஞ்சட் காமாலே போகும்
வாதகா மாலே வகையுட னவிழ்தந்
திராம் பஸ்ப மெட்டி லொன்று
வாளமுஞ் சேரு வகையாய்ப் பொடித்து
திரிகடு பொடியிடு திட்டமாய்ப் போகும்
அறிவுடன் வைத்திய மன்பாய்ப் பாரு
ஊது காமாலே யுண்மையா யவிழ்தம்
பேதமாயயக் காந்தசிந்தூர மெட்டி லொன்று

வாளமும் பொடித்து வகையுடன் கொடுநீ
தூளாய் வியாதி துப்பறப் போகும்
பித்த பாண்டு பிரியமாய்ப் போகச்
சித்தமாய்ச் சொல்லுவேன் ஜெயமாங் காந்த
சிந்துரமெட்டிலொன்று ஜெயமாம் வாளஞ்
சிந்தனை யாகப் பொடித்துமே கொடுநீ
மலஜல மிரண்டும் வகையாய்ப் போகும்
விலகுமே வியாதி விருப்பமாய்ப் பாரு
மகோதரந் தனக்கு வகையாங் குமட்டி
தொகையாய் லேகிய மிரத்தினச் சுருக்கம்
அதிலே பாகமாய் அன்புடன் வன்னி
சதியாய் வைத்துப் பற்பத்தை யுண்டிட
மகோதரம் போகு மயக்கமு மில்லை
தொகையாய்ப் பாரு சூத்திரந் தன்னில்
அட்டகுன் மத்துக் கறிவிப் பேன்பார்
இட்டமாய் வன்னி பற்பம் பணவெடை
தூக்கியே வெடிசுண் ணத்தில் வெல்லம்
பாக்கிய மாகப் பதியக் கொடுநேர்
அன்னஞ் சாப்பிட வரைகிறேன் கேளு
பின்னொரு பாகம் பிழையறச் சொல்லுவேன்
பசுவின்மோ ருபயம் படியவே கடத்தில்
வசிகர மாக வகையா யூற்று
சுக்குடன் பலமுஞ் சுகமாய் நறுக்கு
மிக்கவே கருவேப் பிலைபிடி யாக
இட்டுமே யுப்பு இனமாய்க் கொஞ்சம்
பட்டுவே யிட்டுப் பதிவாய்க் கேளு
ரவிதனி விட்டு நலமா யரிசி
கவியவே பொங்கிச் சாப்பிட நன்று

பத்துநாள் பொங்கிப் பதியமே வுண்டிடு
சொந்தமு மாகுஞ் சுகமாய்ப் புலத்தியா
புளுக்கைபல் குன்மம் போகவே கேளு
தளுக்கவே வெடியின் தான்கடுஞ் சுண்ணம்
வன்னி பற்பம் வகையுடன் பத்து
வெடியின் சுண்ணம் வகையா யெடைசரி
சேர்த்துமே யெட்டுக் கொன்றிட வாளம்
பார்த்துமே சேர்த்து வகையாய்ப் பொடித்துக்
கொடுத்திடப் புழுக்கை குன்மம் போகும்
அடுத்துமே சோறு பொங்கியே யுண்டிடு
அட்ட குன்மமு மாயிர வாயுகள்
திட்டமாய்ப் போகுந் திருவாம் புலத்தியா
உதிர வாய்வுக ளுண்மையாய்ப் போகப்
பதியாய்த் திரிகடு பதியமே பொடித்துக்
கொடுத்திட மண்டலங் குடிவிட் டேகும்
அடுத்துமே வன்னி பற்பம் பணவெடை
யுண்டிட வுதிர வலியது தீருங்
கண்ட பேருடனே கனிந்துரை யாதே
இடுப்பு வலித்திடி லின்பமாய்க் கேளு
முழங்கால் முழங்கை முதிரவே வலித்தல்
சூலை குடைச்சல் சுத்தமாய்ப் போக
வாதக் கடுப்பு வகையுடன் தீரச்
சீனப்பல மைந்து சித்தமாய்க் கேளு
அன்பாய்ப் பொடித்து அதிலிடு மருந்து
சேர்திரி கடுவகை திட்டமா யிளவறு
அறிவுட னதிலிடு வாகா யொன்ருய்
வெருகடி யெடுத்து விதமா யுளங்கை
தனிலிடு நெய்யிடு தக்கதோர் வன்னி

பற்பம் பணவெடை பதிபவே வைத்துத்
தாபரமாகத் தாகமாய்ப் பத்து நாள்
உண்டிட் டிருநீ யுண்மைபா யிளைத்துக்
கண்டிடு உடல்தான் கனத்துமே போகும்
பத்தியங் கேளு பழஞ்சோ றுகுஞ்
சத்தியாய் நல்லெண்ணெய் தானே யாகும்
வாய்வுத் தீனி வசமாய்த் தள்ளு
கசப்பு மாகா கத்திரி கூட்டு
இசைவாய்ப் பாரு இருந்திடம் விட்டுப்
போகுமே வலிகள் போக்கோடே பாரு
கரணந் தப்பினால் மரணம் வந்திடுந்
தருணமாய்ப் பாரு தர்க்கஞ் செயாமல்
மலமடைப் புக்கு ஆகவே முன்சொன
பலனதைப் பாரு பிரட்டுசெய் யாதே
கிராணிக் கெல்லாங் கபாடஞ் சொன்னேன்
திராணியால் வன்னிபற் பத்தில் வைத்துச்
சாப்பிடக் கிராணிபோந் தடையறப் பாரு
வாலமாய்க் கண்டால் வகையுடன் சொலக்கேள்
வன்னி ரசத்தை வகைபா யெடுத்து
வுன்னியே திராவக மதிலிடு வெண்ணெயாம்
வெண்ணெயைக் குன்றி மணிபோற் குச்சியில்
நன்னய மாக வழித்துமே கேளு
முளைக ளுள்ள மூலக் கிராணி
தளையாய் முடிக்கச் சொல்லவுங் கேளு
வெளிதனில் மூளைகள் விட்டுமே வந்திடுங்
களையா யதிலே கனிவாய்க் கொஞ்சம்
பூசிடப் பாகமாய்ப் பிரிந்துமே யொருநொடி.
ஆகிடக் கரையு மதுநல பாகம்

கரைந்துமே போனால் களிவா யெருமை
விரைந்துமே தயிரை யூற்றியே பிசைந்து
கட்டநீறுங் சனமாய்ப் பாகமாய்த்
திட்டமாய்ச் செய்து திடமாய்ப் பாரு

சண்டரச பஸ்பம்.

சண்டரச பஸ்பந் தருந்தபே ரேது
பண்டாய்ச் சொல்லேன் பதிவுடன் புத்தியாய்
லிங்க வாலை ரசமது வாக்கித்
துங்கமா யுப்பி லெரித்திடப் பற்பம்
இதுதான் சண்ட ரசபற்ப மாகும்
எதுவிது வென்று ஏங்கி யிராதே
வியாதிக ளறிந்து வினவியே செய்து
பலாபல மாகப் பகர்ந்துரை புலத்தியா
குறிப்புடன் பாரு குணமாய் வியாதி
தெறிப்பாய்ச் சொல்லித் திட்டித் திரியாதே
லிங்கத்தைப் பாரு நினைவா யுனக்குத்
துங்கமாய்ச் செலவுக்குத் தருவார் சிவனும்
வயித்திய சிரோமணி வாகாய்ப் பேர்வருந்
தயித்தியர் போலத் தர்க்கம்பே சாதே
தென்பொதி கையினில் திட்டமாய் வாசமாய்
அன்பதாய்க் கரிசலை யாராய்ந் தெடுத்துப்
பாக மநுமதி பாகமு மெடை வகை
தாகமாய்ச் சொன்னது சரிகா ணிதுநலம்
முனியரு ளியதை முடிவறப் பாரு
தனிகை பாகமாய்த் தடையறச் செய்வதே. 26

தங்காரசச் சிந்தூரம்.

ஜெயவன்னி ரசமெடு செப்பத் திராவகம்
நயமாய்விட்டு நலமதாய் மூன்று நாள்
வைத்திடப் பூர்க்கும் வளமாய்க் கேளு
நைந்துமே பூர்த்த வெள்ளையு மேகம்
ரேக்குத் தகடது நிரையா யேகந்
தாக்குமே யிரண்டுந் தடையற வரைத்து
வாக்கதாய் ஜாம வகைபனி ரண்டு
உருட்டியே வெற்றிலை யுள்ளே வைத்து
நெருக்கியே யுண்டை ரவிபட வுண்டையை
பெருக்கியே மேலே வெற்றிலை யுள்ளே
பொதிந்து மணலது சலங்கை மண்ணை
யெடுத்துக் கனல்நடு வைத்துக் கனக்கவே
யுண்டை மேலிடு மண்ணை விருப்பமாய்க்
கொட்டி யதன்மேற் புடமிடு கொஞ்சந்
தாக்கக் கதிபெற கனயாய் மஞ்சளாம்
எடுத்துமே கணபதி பூஜையும் பண்ணு
தடுத்துமே ஓம்நம சிவாய மெனச்சொல்
என்றுமே நூறு உருவது ஜெபித்து
நன்றுமே ரவியில் நாற்பதி லிரண்டரை
கொடுத்திடச் செம்பு குணமா யெட்டரை
அடுத்துமே நின்று ஆடியே நிற்கும்
எடுத்துச் செலவுசெய் யின்பமாய்ப் பாரு
அடுத்துமே ஞானம் யோகம் பலித்திடுந்
தங்கமும் பண்ணு ரசமது வித்தை
யிங்கிதமாகு மினிய புலத்தியா
உப்பு காவிக் கோடாப் புடமுந்

தப்பியே போகா தனைவழி பாரு
சிந்தூரங் குன்றி யெடையிடு உடலில்
சிந்தையாய் மேனி சிறக்கவே கற்றாண்
ஆகுமே கண்தா னல்லிப் பூப்போல்
ஏகுமே மேனி யினியசுகந் தம்பூ
மேலது மாந்தளிர் போல மேனியாங்
காலது வைரங் கனகம் போலாங்
கற்றா ணுகுங் கனக சிந்தூரங்
கைப்பும் புளிப்புங் கனமாய்த் தள்ளு
மெய்ப்புடன் மண்டலம் மெய்ம்மையா யுண்ணு
ஆவின் பால்சே ரடைவாய் நெய்யும்
ஓயாமற் சேரு காந்த வரையில்
மாயா தேகம் வலுவாய் நிற்கும்
வாசி யிறுகும் மாமதனுஞ் சிந்தும்
ஓசையா யொளியு முடலிலே யாகுந்
தின்றிடக் கற்ப மழியாத் தேகம்
வின்றிட வானோர் விருப்பமாய்ச் செய்வார்
கண்டுமே யுற்றுக் கருணையாய்ச் செய்யப்
பண்டுமே சித்தி பதிவாம் நிரையாம்
நிரையாந் தங்கம் நேராம் லிங்க
மரையாது செய்தா லதுபல னாகுங்
காய மிறுகுங் கல்லது போலாம்
மாயமாய்ச் சொன்னால் மயக்கம் வந்திடு
மிப்படிச் சித்த ரியல்பா யுண்டு
தப்பித மாய்த்தான் மூலி யுண்டென
வென்றுமே பொய்க ளிதம்பெறச் சொல்வார்
நன்றுமே சிஷ்யர் மூலிகை தேடி
அலைந்து அலைந்து யதையுண் டென்று

குலைந்துமே தேகங் கெட்டது போகும்
பொய்சொல்லி விட்டால் பேதமாய் வந்திடும்
மெய்யிது சுருக்கம் வினவினேன் பாரு
சித்தியா யோகத் திருக்கவே சொன்னேன்
பத்தியாய்த் தங்கம் லிங்கம்பாரு
ஆப்பிடா விட்டா லதுவே தென்றால்
கூப்பிட் டயத்தைக் கொடியசிந் தூரமாய்ப்
பண்ணியே யுண்ணு பதிவுட னப்படி
யெண்ணமாய்த் தேக மினிதாம் பாரு
லிங்க ரசத்தை நினைவுட னெடுத்துத்
தங்கமுஞ் சேர்த்துச். சாத்திடிற் சிந்துரஞ்
செம்பது பழுக்குஞ் ஜெயமுள புலத்தியா
ஏமமு மில்லா தெளியவ னானல்
காந்தமு மயமுங் கருணையாய்ச் சரியெடை
சேர்த்துமே பவழ மாக்கிடு லிங்கம்
வால ரசமெடு வாகாய்த் திராவகங்
கோலமாய் விட்டு ஊறிடச் சேர்த்தரை
சிந்தூரஞ் செய் சாப்பிடு முன்போல்
முந்தவே சொன்ன தேகமு மாகும்
மாமுனி பொதிகை வாழ்முனி யுண்டது
பாதகம் போல்வடி வான தேகமாஞ்
சிந்துர மாகும் ஜெயமுள பாதை
தங்கம்போல் வேதை தாக்கிட வயமும்
இங்கித பாக வரைந்தனர் மாதவ
முனியருளிய சொல் முடிவதாய்ச் செய்யே. 27

சௌக்காரம்.

ஆதி சிவனருள் பெற்றவம் மைக்குச்
சேதிய தாக ஜெயசௌக்காரம்
வரையறை யாக வகுத்துமே சொன்னது
உரையா யம்மை யுறுதியாய் நந்திக்கு
முறைமையோ டேசொல முடிவாய் நந்தி
அகத்தியர்க் கருள அகத்தியர் புலத்தியர்க்
ககத்துடன் சொல்ல தக்க புலத்தியர்
மூலர்க்குச் சொல மூலர் கொங்கணர்க்
கருளவே கொங்கண ரன்பாய்ப் போகருந்
திருவாய்க் கேட்டுத் திரமாய் நிகண்டாய்ப்
பாடியே குகையில் பதிவாய் வைத்திடத்
தேடியே மச்ச முனியெடுத் தப்புறம்
நவமாய்ச் சித்தர் நலமாய்ப் பார்த்துக்
கவனமாய்ப் படித்துக் கருதிட வாயிரத்
தெழுநூ றதனிற் பாடிப் படிக்கத்
தயிலங் களங்குசிந் தூரமும் பார்த்து
அயிலமா மெழுகு அடைவுடன் கண்டுத்
திட்டமா யிருக்கும் ஸ்திரமாம் வேதை
இருக்கின்ற தென்று இன்பமாய்ப் பார்த்துச்
சௌக்கார மட்டுஞ் சரியாய்க் கிளையும்
என்றுமே வகத்திய ரின்பமாய்ச் சொன்னார்
கண்டுமே மச்ச முனியவர் களித்துமே
எண்ணெயை விட்டு வாங்கவே பாடிக்
கோத்திடப் புத்தகங் குணமுள சித்தர்
யாவரு மறிய யெண்ணெயைப் பாடவுந்
தலைகா லாகப் பாடியே கோத்தார்
சூத்திரந் தன்னிற் சுயம்பெறச் சொல்வேன்

பார்த்துமே சௌக்காரம் பண்புடன் பாரு
பூநீர் விளையும் பொட்டில் பாரு
தானது வடிபிற் கல்லுகள் மெத்த
உண்டுமே வெட்டி யுண்மையா யெடுத்துக்
கண்டுமே சமுத்திர நீரதில்விட்டு
எரித்திடச் சுத்தியினியதோர் கல்லைச்
சரித்துட னெடுத்து தானைந்து மரக்கால்
பெரியதோர் காள வாயிலே வைத்து
விரிபெற நீற்றி விதமுள பாணியை
விட்டுமே மண்டலம் விதமாய் வைத்துக்
கெட்டியாய் மேலே தெளிவையும் பார்க்க
அடைபோ லுப்பாம் அதைவழி பீங்கான்
கோடையி லிட்டுக் குணமாய் ரவியில்வை
காய்ந்து எண்ணெயுங் கக்குமே பாரு
கல்லுப்புச் சொல்வேன் ருத்துடன் கேளு
நல்லொத்த வாருதி நாதமு மாச்சுக்
கடல்நுரை கல்லுங் காண வெடுத்துத்
திட்டமாய்ச் சுக்கான்போல் நீற்றியே யெடுத்துக்
கல்லுப் பவ்வெடை கணக்கா யளந்து
வெல்லுமே யிரண்டையும் விருப்பமா யரைத்துப்
புடம்பெரி தாகப் போட்டெ டுத்திட
மாதா பாணியால் கரைத்துமே பீங்கான்
இட்டிட வுப்பா மினிய புலத்தியா
கெட்டியா யெடுத்துக் கிருபையாய்க் கேளு
சீன மூதி சிறப்புடன் சுண்ணமாய்
வான் மீன் போலச் சுண்ணமு மாகும்
எடுத்துமே யப்புற மினிரச வாதிகேள்
அடுத்துமே யெல்லாஞ் சேர்க்கிற பாகங்

கேளுமே சுக்கா நீறுப்பு நான்கு
வாளுமே கடல்நுறை யுப்புமே யொன்று
சீனச் சுண்ணஞ் சிறப்புட னென்று
தானமாய் மூன்று முப்பு வாச்சு
எடுத்துமே பீங்கா னியல்பெற விட்டு
அடுத்துத் திராவக மதுமூன்றுஞ் சேர்த்ததில்
ஒன்றுக்கு நான்கு திராவகம் விடவுங்
கண்டுமே கேளு கருத்துடன் பாரு
வெடியுப் புத்தசம் விருப்பமாய்ச் சீனங்
கடிசே ரிருபத் தைந்துமே சேரு
கடமதி லிட்டுக் கிளரவே திராவகம்
வடித்துமுப் புவில் வாகா யிட்டுக்
கொதித்திடப் பொங்காமல் குணமாய்க் காய்ச்சி
அடியாய் குளம்பா மப்பரு வத்தில்
சாம்பலைப் பரப்பி ஜலுதியாய் மேலே
துணிவிரித் தன்மேல் துடியா யூற்றி
உண்டையாய்ப் பண்ணி யுறுதி புலத்தியா
ரவியிலே காய நலமாய் வைத்து
ஐந்துசுண் ணத்தி லடைவுட னெட்டுப்
புடமிடு கோழி பின்பு எடுத்து
முப்பு எடையாய் முன்ரச பற்பம்
நப்புடன் சேர்த்து நலமாய்ப் புகைநீர்
விட்டு அரைத்து வில்லையாய்ப் பண்ணி
கட்டுமே ஐந்து சுண்ணத்தில் வைத்து
லகுபுட மிடுபே ரான வழலையாங்
திடமதாய்க் குருவாந் திட்டமாய் முப்பாந்
திருசௌக் காரமாந் திருகட மாகியாம்
ஆதியாய் முடியா மாகி நடுவாஞ்

சாத்திரந் தன்னிற் சலிப்புடன் மறைத்துச்
சூத்திரந் தன்னிற் றிறந்துநான் சொல்லேவன்
சித்த ரெல்லாஞ் சிறப்பாய் மறைத்தார்
பூநீர் வாரி புதுப்பாண் டத்தில்
இட்டுக் கரைத்து இதமாய்நல் லெண்ணெய்
விட்டுமே வாங்கச் சொன்னார் பாரு
வாதிகள் கரைத்து வகைபாய்நல் லெண்ணெய்
யூற்றிக் குழப்பி யெண்ணெயை வாங்க
வாரா ததனால் வகையிலா வழலை
சேராப் பேருடன் சேர்ந்துமே பிள்ளை
எடுத்து வந்து இதமாய் மண்டையை
விட்டுமே வழலை பிரபல மாகவே
யிதுதான் வழலை யெனச்சொல்வார் வாதி
யொன்றையொன் றுய்நினைத் துருகுவார் வாதி
கண்டுமே சித்தர் கருவை மறைத்தார்
வழலை யிதல்ல வாகான முனியே
சொன்னதைப் பாரு சுயபா ஷாண
மெல்லா நீறு மின்பமா யுபரசம்
வெல்லவே நீறும் விருப்பமா யுப்பு
இருபத் தைந்து இன்பமாய் நீறுந்
துருசது நீறத் தொகையது கேளு
வரிசையாய்த் துருசு பலம்பத் தேகம்
நிறுத்துமே வைத்து நினைவுடன் கேளு
விருத்து சௌக்காரம் புகைநீர் விட்டுக்
குழைத்து மேலே தடவு நீயுங்
கட்டுமே நீறுங் கவரது கோடி
வெள்ளீ யம்மேல் விருப்பமாய்த் தொட்டுத்
துள்ளியே தொட்டுப் போடவே நீறும்

வெங்கல நீறும் விதமினி யென்சொல்வேன்
தங்கமு நீறுந் தானேபா ஷாணம்
இங்கித மாக வியல்புட நீறும்
அடியு முடியு மநாதியு மிதுதான்
வழலைச் சுண்ணம் பொய்யென்பர் லோகர்
நிழல்போற் றெரியு நேராம் பாகம்
முத்தியாய்ச் செய்து முனியது பாரு
சித்தர்கள் மறைத்த திறமை யிதுதான்
சுருக்கைப் பார்த்துச் சுருக்கமாய்ப் பாரு
இப்படிச் செய்தால் வழலை முடியும்
முடிந்தது வழலை முதன்மையாய்ப் பாரு
முன்னே யயத்தை முடிவாய்ச் செம்புபண்
பின்னே செலவு பிரித்துட னெடுத்துச்
சௌக்கா ரப்பணு ஜலுதியாய் வங்கம்
நலமாய் நீற்று நல்லதோர் துருசைப்
பாகமாய் நீற்றிப் பதியவே ரசத்தை
யோகமாய்க் கட்ட வொக்கவே நீறும்
ஒன்பது லோக மொக்கவே பாய்ச்ச
இங்கித மாக ஆகிடுந் தங்கம்
இது தான் பாதை யிப்படி வெகுவிதம்
முதிரவே யொன்று முடித்து எடுத்திடு
தென்பொதி கையில்வளர் சிறந்த தமிழ்முனி
இந்நவ கோடி சித்தர்க்கறி வித்ததே. 28

அயச்செம்பு-வேறு.

சுத்திய வயப்பொடியு மேகநிறை யாகுஞ்
சுகமான வெண்காரி பாதியென லாகும்
மத்தினிய செவ்வல்லி சாற்றிலரை யுருக்கு
மணிசிறிய பயரளவு மணியா யிறங்கும்

சிக்கென வெடுத்துநிரை பாதியிடு காரி
ஜெயமா யரைத்துமே யைம்முறை யுருக்கு
மைக்கினிய கருமணிபொ லுருகுமது மணியாய்
மயமான விபரமினி சொல்லுவது கேளே. 29

கேளுமே கால்வாசி வீரமது கூட்டு
கெடியான புகைநீரி லரைத்துவில்லை பண்ணு
தாளுமே புடம்போடு எடுத்தரைசெய் யுண்டை
தானேதான் ரவியிலிடு காயவை மேலே
காளுமே கெந்தியது முக்காலும் பண்ணு
கனிவாக அரைநீரா லரைஜாம மேகம்
வாளுமே யுண்டைமேற் கவசமது கட்டு
வகையான சுண்ணும்பு மேலிடவே கேளே. 30

கேளுமே மண்கவச மதின்பேரி விட்டுக்
கெடியான ரவிதனிலே காயவே வைத்துத்
தாளுமே பொடியாக யெருவதனைப்போடித்துத்
தக்கதொரு புடம்பெரிதாய்ப் போட்டுமே யெ [டுநீ
வாளுமே மூசைதனி லுருக்கிடவே கேளு
வகையான ரவியெடுநீ பாருமே மேலுந்
தாளுமே மதியெட்டில் கொடுத்திடவே கேளு
தக்கவய தாகுமே சொன்னரவி பாரே. 31

பாருமே யிதைவைத்துச் செலவுதான் செய்து
பண்பாகத் தவத்தோர்க்குத் தொண்டுமே பண் [ணு
சேருமே மலைகளிலே சஞ்சரித்துப் பாரு
ஜெயமான சித்தர்களை வணங்கிநீ கேளு
சாருமே வெகுவித்தை வந்திடுமே சித்தி
சதகோடி விதிகோடி சத்துமஹா கோடி

ஏருடேனே யுழுதாலோ வேளாண்மை யாகு
மிதமான ரசவாதஞ் செய்துமே பாரே. 32

கெந்தகசுத்தி மாத்திரை.

கெந்தக சுத்தி கிருபையாய்க் கேளு
நந்தி சொன்னதை நாடியே பாரு
நாத்தந் தசமெடு நாடியே யரைக்கப்
பார்த்துமே சீனம் பதினாறு பலமிடி
யுடைத்துமே சட்டியி லுண்மையா யரையிடு
படைத்துமே வாலை படியவே மூடி
உளுந்துபண் சீலை யுண்டையாய்ச் செய்து
அழுந்தவே திராவகம் அடைவுட னிறங்கும்
வெள்ளைநீ ராகும் வெண்ஜலம் வருகுங்
கள்ளமா யெடுத்துக் கனகமாய்க் குப்பியி
லடைத்துமே வைத்து அடைவது கேளு
துடைத்துமே கெந்தியி விட்டுமே யரைவி
காயவே வைத்துக் கனிவாய்க் கேளு
தாயக மாகத்தாக் காவின் பாலை
வாய்ப்பா யரையிடு வகையாய் மேலே
தூசணி வித்துத் துப்பற வாகப்
பாசமா யதன்மேற் பரப்பியே கெந்தியை
மேலே கடத்தை விருப்பமாய் மூடி
எரித்திடப் புட்டாய் யின்பமாய்க் கேளு
பரித்த வடியிற் பரிவாய்த் தீயெரி
எரித்திட மணியா யின்பமா யிறங்கும்
பாகமா யெடுத்துப் பதிவாய் முன்போல்
ஏகமா யிப்படி ஐந்து முறையும்
பண்ணிடச் சுத்தி பவழம தாகும்

எடுத்துமே ரசமெடை யின்பமாய்ச் சேர்த்து
அடுத்து அரைக்க அதுகரி யாகுங்
களங்கமு மாகுங் கரியையெரி யாதே
வளங்காண் வியாதி வடிவுடன் கேளு
இரண்டுமே நின்ற நிறைக்குமே வாளங்
கண்டுமே யரைக்கால் கனிவுடன் சேரு
அரைத்துமே களங்கா யதிலொரு பணவெடை
நிரைத்துமே தேனில் நிண்ணய மாகவே
யுண்டிட மண்டல முற்றுமே வியாதிகள்
கண்டுமே யொளிக்குங் கவலைப் படாதே
எவ்வெவ் வியாதி கணக்கது கேளு
சுந்தர மான வாத மெண்பது
போகுமே முனிவர் பொருந்தியே சொன்னார்
பித்தமு நாற்பது பேர்ந்துமே போகுஞ்
சிலேத்பன மெல்லாந் திட்டமாய்ப் போகும்
வாதமும் பித்தமும் பருவவே போகுந்
தாதைபோ லவிழ்தந் தந்திட நோவு
தவிடு பொடியாந் தக்கதோர் பத்தியஞ்
சுவதே தேகங் கணக்கது கேளு
சூலைவிப் புருதி தோன்றியே யொளிந்திடும்
வாலையு மாவார் வடிவது மெத்த
குட்டம்பதி னெட்டுங் குறைநோய் போய்விடுந்
திட்டமாய் ஜன்னி போகுமே யொருநொடி
கண்கள்செவ் வலரிப் பூவது போலாம்
புண்கொள் வியாதி காட்டப் போய்விடும்
எங்கள் குலத்திற் கிதுதா னவிழ்தந்
தங்கம் போலாந் தக்கதொரு மேனி
ஈளை யெலிகடி ஏகவே கேளு. 33

தாளகச் சிந்தூரம்.

காலை போல் தாளகங் கனிவாய்ப் பொடித்து
முன்ரச கெந்தியில் முக்கிய மாகத்
தண்மையா யுருக்கித் தாளக மோடு
கிண்டிடு குப்பியில் கிருபையாய்ப் பவழமாந்
தொண்டுசேர் பணவெடை திரிகடு தனிலிடு
க்ஷயமுத லெல்லாஞ் சலிப்புடன் போகும்
பயமிலைத் திரிநாள் பத்திய மாகச்
செலுத்திட க்ஷயமுந் திட்டமாய்ப் போகும்
வலித்திடு நோய்கள் வலிப்புடன் போகும்
எலிகடி நீங்கு மெண்பது வாய்வறு
மண்டலி கடிகள் வலிப்புடன் போகுங்
கண்ட பொழுதே கருணையாய் நீங்கும்
இப்படிக் களங்கி விதமாய் வெகுநோய்
அப்படித் திரு மதுபல னாகும்
பவுத்திர மெல்லாம் பதைப்பற் றோடிடுங்
கவுத்துவம் போலக் கருணையு மாகும்
போகமு மாகு மிருந்திடந் தனிலே
பாகமாய்ச் சோறு பதைப்பற வந்திடும்
ரவியில் நூறு கொண்டிடச் சொன்ன
கவியவே போக ரேழாயிரஞ் சொன்ன
ரதையறிந் திட்டா லதுரவி பழுக்குஞ்
சிதையறி மேனி செங்கதி ராகும்
வகையாய்க் கரிபோ லாச்சுதே யென்று
தொகையாய்ச் சொல்லிச் சோம்பித்திரி யாதே
சிவனுடை விந்து ரசத்தைக் கூப்பிடு
அழைத்துத் தவமா யென்னைரட் சியுமென்று

தேவியே கெந்தியே திட்டமா யெனக்கு
ஆவலா யருள வென்றுமே கேளு
சகலமுங் கொடுக்குஞ் சமுசய மில்லை
மூலக் கிராணி சோகையு நீங்கும்
வாலையாய் மேனி வடிவுற வாகுந்
தங்க மாமவர் தவம்புரிந் திடுமுனி
உங்களுக் காக உறுதியாய்ச் சொன்னதே. 34

அயச்செம்பு தங்கநாகஞ் சேர்த்துச் சிந்தூரம்.

அயத்தின்செம்பு தானெடுத்து ஆனநான்கு யுகமதா
மாதியொன்று தங்கநாக மானநேர்கொ ளளவெடை
தயத்தின்ரெண்டு சேர்க்கவஃது தானெபிட்டு வெள்ளை
[யாந் [னில்
தக்கபிட்டைத் தானெடுத்துக் தானேமுன்பு ரவித
கயத்தினோ தாயுருக்கிக் காணநான்கிற்கொன்றுமே
காதலா யுருக்குசேர்பின் காதலா யுடைத்துமே
பயத்தினேரு ரசமொர்பாக மாகவைபக் கெந்திநேர்
பக்குவம்ம தாய்நிறுத்துப் பாகமா யெடுத்திடே.
எடுத்துமே யரைத்திடாய் கரிசலையிற் சொன்னது
ஏகமா யரைத்துரவி தன்னிலைவை பவழமாம்
அடுத்துநூறு செம்புதன்னி லாண்மையா யுருக்கியே
யாதியொன்று தாக்கிட வணைத்திடவே தங்கமாந்
தொடுத்துரச வாதந்தானும் தொன்மையாகநன்மையாம்
சோதியாதி பேதியாஞ் சுகந்தவர்ண மாற்றுமே
கடுத்துமே அகத்தியர் கனிந்தயச்செம் பதனையே
காதலாய்ப் புலத்தியர் களிக்கவே யுரைத்ததே. 35

அயபஸ்பம்.

வேம்படி தன்னில் விரும்பியே சொல்ல
அம்மையு நந்திக் கருளிய வாதம்

செம்மையாய் வைத்தியந் தீர்க்கமாய்ச் சொல்ல
நந்தியு மசுவனி தேவருக் கருளப்
புந்தியா யசுவனி புத்திய தாகத்
தன்வந் திரிக்குரை செயத்தன் வந்திரி
வன்மையா யகத்திய வடிவார் முனிக்கு
நன்மையாய்ச் சொல்லிட நாடியே யகஸ்தியர்
புலத்தியர்க் கருளின பெரிய கரிசலை
சூத்திர மாக முப்பத் தாறில்
அயபற் பந்தனை யறிவுடன் கேளு
நயமதாய்த் தந்த ஜடநீ ராலே
மூன்றுநா ளூற முக்கிய மாகவே
நன்றாய்ப் பாணியால் நலம்பெற வரைத்துக்
கரைத்துமே பின்னர்க் காணவே கேளு
யரைத்திடப் பண்ணை யதிலரை யிடுநீ
நிரைத்துமே வீழி வேர்த்தோல் பட்டை
சீவியே யிடித்துச் சிறக்கவே பிழிந்து
ஆவலா யரைத்து யதிலிடு புடமுந்
திரிநே ரிட்டுத் திட்டமா யெடுத்து
அறிவுட னயத்தி லரைவாசி வீரஞ்
சேர்த்துமே வீழிப் பட்டைநீ ராலே
பார்த்து அரைத்துப் பதிவுட னெட்டுப்
புடமிடு நீறும் பெரிதா யயமுந்
திடமதாய் வெள்ளையாய்த் திட்டமாய்ப் போடு
வெள்ளை யாகு மட்டுமே புடமிடு
கள்ளமில் லாமற் கனிவாய்ப் புடமிடு
வல்லமை போவில் லாதே போனால்
நடமதாய்க் கரியில் வைத்துமே யூதிடு
வெள்ளையாய் நீறும் விருப்பமா யிப்படித்

துள்ளவே செய்தால் துடியாய் நீறுந்
தங்கமு மிப்படி தானவ லோகமு
மிங்கித மாக இட்டிட வெள்ளையாம்
பாடது படாமற் போனால் நீறு
ஏடது பொய்யா மினிரச வாதிகேள்
முடிவினிற் சொன்னேன் முக்கிய மாகத்
துடிகொ ளயநீர் பணவெடை மண்டலங்
கொடுக்க வியாதிகள் குறைநோய் குட்டம்
அடுத்துமே போகும் பாகமாய்ச் செய்து
இப்படிச் செயிலய மியல்பாய் நீறுந்
தப்பியே போனால் தானென் செயலாஞ்
சாத்திரம் பொய்யாஞ் சவங்கிடேல் கேளு
பாத்திர மாகப் பரிவாய்ச் செய்தால்
விருப்பமாய் வேலைசெய் வேலைகள் வாதமாம்
ஆலைகள் போலவே யலைந்தால் பயனென்
அயமது பற்பம் ரவியினி விட்டிடக்
கனியவே யெட்டரை கனிவா யாணியாம்
வரிக்கி வரிநான் சொலமுடி யாது
புத்தியாய்ச் சாத்திரம் பொறுமையாய்ப் பாரு
சத்திய மாகச் சாற்றினேன் கரிசலை
முப்பு விபரம் விதமா யிதுதான்
ஏரு உழுதா விதமாய்ப் பயிராங்
தார்க்கோல் போட்டால் தகுதியாய் காளை
நடக்கும் பாரு நலமாய்ச் சாத்திரம்
வடநூல் கிரந்தம் வண்மையாய்ப் பார்த்துக்
கரிசலில் சொன்ன கணக்கையும் பார்த்துச்
செய்தால் பலனும் சித்தமாய்ப் பாரு
வையகந் தன்னில் வகையாய்ப் பிழைநீ
பையவே செய்து பதிவுட னில்லு

பாகமாய் நிரைகள் பக்குவந் தப்பினல்
ஏகமும் போகு மெடுத்துமே பாரு
ஏதனுற் பார்த்தா லெரிபுடந் தப்பும்
மெத்தவே சொன்னேன் முறைபோல் பாரு
வாளமில்லாமல் மருந்துகள் செய்தால்
தேளாம் விபாதிகள் திட்டமா யேகா
பாகத் துடனே பதிபவே நிறைபாய்
யோகமாய்ச் செய்தா லொழுங்சது வாகுஞ்
சித்தர் மறைத்த சிறப்பையுஞ் சொன்னேன்
சாதனை யாகத் தர்க்கம்பண் ணுமல்
போதனை யாகப் புத்தியாய் விசாரி
எப்படி யெல்லா மின்பமாய் வருகுஞ்
சொற்படி தப்பினல் சுருக்கமும் பொய்யாம்
நற்கட லதனை நலமாய்க் குடங்கையி
லேற்கவே யுண்ட இனிய மகாமுனி
சொன்னது சூக்திரஞ் சுருக்கமாய்ப் பாரு
இந்நிலந் தன்னி லெடுத்துரைப் போரே
பாடினேன் பாகம் பரிவுடன் பார்த்துக்
தேடியே நின்றால் திறமுடன் செய்தாற்
பலக்குமே வைத்தியம் பண்பாய் ஜீவனம்
வலுத்துமே யாகும் வடமொழிக் கிரந்தம்
பார்த்துமே படித்துப் பதிவுடன் சொன்னேன்
சேர்த்துமே பாரு திட்டமாய் வாதமா
மயத்தையே கூப்பிட் டடியேற் கருளெனத்
தயவாய்ச் சொல்லு தவப்பலங் கொடுக்கும்
ரசத்தையு முழைத்தே நயமுடன் வாதம்
பிசகறக் கொடுக்கும் பிரபல மாக
வுப்பையு முந்த உண்மையாய்ப் பாரு

எல்லா மறிந்து இன்பமாய்ச் சோதி
சொல்லாற் பெரியோர் சொன்னது புத்தி
சமுத்திரந் தன்னைத் தான்குடங் கையில்
அணைத்துமே வாங்கி யதையுண் மாமுனி
சொன்னது சூத்திர முப்பத் தாறுமே
நன்மைய மாக நவிலவே பாமே 36

யூகிமுனி க சலை 36
முற்றுப் பெற்ற

வாலைமனோன் மணிபாதம்
சீலமுடன்றினம் வாழ்க.
ஓம் தத் ஸத்